1987 நவம்பர் 12]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, அரசு அறிந்த காரணத்தால்தான் இந்த ஆணையில் திருத்தம் மேற்கொள்ளப்படுகிறது.

டாக்டர் அ. பொன்னுசாமி : பெருமை பெற்ற பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, வெளி மாநிலங்களிலிருந்து தமிழ் நாட்டுக்கு அரிசியையோ அல்லது நெல்லையோ கொண்டு வருவதற்கு லெவி போடுகிறார்கள். அதை எடுப்பதற்கு அரசு முன் வருமா ? செஸ் போடுகிறார்கள். அதையும் எடுப்பதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, அத்தகைய வாய்ப்பு எதுவும் இல்லை. இருந்தாலும் தனிக் கேள்வி போட்டால் விவரம் தர இயலும்.

திரு. கே. பாலாஜி : : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு மாவட்டத்தையும் சென்னை மாவட்டத்தையும் இணைத்து ஒரே மண்டலமாக்கி செங்கல்பட்டிலிருந்து அரிசியை சென்னைக்குக் கொண்டு வருவதைப் போல, அனைத்து மாவட்டங்களுக்கும் எடுத்துச் செல்கிற ஒரு உத்தரவை அரசு அறிவிக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, அறிவிக்காது.

திருச்சியில் பாதாள சாக்கடை, குடிநீர் திட்டம்.

63—(*வினா எண். 5144)—திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாநகரில் 13 ஆண்டுகளுக்கு முன்பு துவக்கப்பட்ட பாதாள சாக்கடை, குடிநீர் திட்டம் தற்பொழுது என்ன நிலையில் உள்ளது?

(ஆ) இத்திட்டம் துவக்கப்பட்டபொழுது எவ்வளவு செலவாகும் என்று மதிப்பிடப்பட்டது?

(இ) திருத்திய மதிப்பீட்டின்படி செலவு எவ்வளவு ஆயிற்று?

மாண்புமிகு திரு. க. இராசாராம் :: துணைத் தலைவர் அவர்களே,

(அ) திருச்சி பாதாள சாக்கடைத் திட்டம் குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தின் இரண்டாம் நிலை ஆகியவை தற்பொழுது முடிவடையும் நிலையிலுள்ளது.

(ஆ) மற்றும், (இ): திருச்சி பாதாளச் சாக்கடைத் திட்டம் துவக்கப்பட்டபோது ரூ. 285.06 இலட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டது. திருத்திய மதிப்பீட்டின்படி இத்திட்டத்திற்கு

[1987 நவம்பர் 12

ரூ. 664.90 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப் பட்டுள்ளது. ஏப்ரல் 1987 முடிய இத்திட்டத்திற்கு ரூ. 616.30 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. திருச்சி குடிநீர்த் திட்டத்தின் இரண்டாம் நிலை ரூ. 161.30 இலட்சத்திற்கு மதிப்பிடப் பட்டது. பிப்ரவரி 1987 முடிய இத்திட்டத்திற்கு ரூ. 177.49 இலட்சம் செலவாகியுள்ளது.

திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திலே இரண்டாவது நிலை என்று இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். இரண்டாவது நிலை என்றால், இன்னும் எத்தனை நிலையிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூன்றாம் நிலை ஒன்று இருக்கிறது. அந்த மூன்றாம் நிலையைப் பொறுத்த வரையில் ஆய்வுப் பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தாலே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(முற்பகல் 10—10)

திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்தத் திட்டம் போட்ட நாளிலே இது 5 கட்ட வேலையாக பிரிக்கப்பட்டதாகப் பொறியியல் வல்லுநர்களால் திருச்சியில் சொல்லப்படுகிறது. ஆனால் இன்றைக்கு 13, 14 ஆண்டுகளுக்குப் பின்னால்தான் இரண்டாவது கட்ட வேலை நடந்துகொண்டிருக்கிறது. ஆக மூன்றாவது கட்ட வேலை, 4-வது கட்ட வேலை, 5-வது கட்ட வேலை ஆகியனவற்றை ஆரம்பிக்க மேலும் 10, 15 ஆண்டுகள் ஆகிவிட்டால், அப்போது இன்றைக்கு இருக்கிற திட்டத்தின் மதிப்பீடு மேலும் உயரும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உணர்வார்களா? ஆகவே அதை உணர்ந்து வெகுவிரைவில் முடிக்க ஆவன செய்வார்களா? மேலும் இன்றைய தினம் திருச்சி மாநகரம் வளர்ந்து வருகிற நகரமாக இருக்கிறது. இன்றைக்குப் போடப்பட்ட திட்டங்களுக்குப் பின்னால் திருச்சியிலே பல்வேறு பிரிவுகளில் நகர் அபிவிருத்தி அடைந்திருக்கிறது. அந்தப் பகுதிகளுக்கு இந்தத் திட்டம் மிக விரைவில் பயன்பட ஏற்பாடு செய்யப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருச்சி சென்னையைப் போல ஒரு பெரிய நகரமாகும். அது வளர்ந்து வருகிற ஒரு பெரிய நகரம். 6 கட்டங்களிலேதான் அந்தத் திட்டத்தை முடிக்க முதலிலே திட்டமிடப்பட்டு இருந்தது. இரண்டாவது கட்ட வேலை முடிந்து இப்போது 3-வது கட்டத்திற்கு வந்திருக்கிறோம். அங்கே பெரிய தெருக்களும் இருக்கின்றன. சின்ன தெருக்களும் இருக்கின்றன. காந்தி மார்க்கெட் பகுதியில் தெருக்கள் மிகக்குறுகிய தெருக்களாக இருக்கின்றன. அங்கே ஏற்கெனவே தொலைபேசித்துறை, மின்சார இலாக்கா போன்றவற்றின் வயர்கள் எல்லாம் பதிக்கப்பட்டு இருக்கின்றன. எனவே தபால் தந்தி இலாக்காவின் கம்பிகள் எல்

லாம் கெட்டுப்போகாமல் இருப்பதற்காக பகிர்மானக் குழாய்கள் பதிப்பதில் நிறைய காலதாமதம் ஏற்பட்டது. ஆக எல்லாவற்றி லும் காலதாமதம் ஏற்பட்டிருந்தாலும் தொடர்ச்சியாக இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு திருச்சி நகர் முழுவதற்குமாக இந்த பாதாளச் சாக்கடைத் திட்டத்தை நல்லபடியாக உருவாக்க ஏற் பாடுகள் துரிதமாக நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. உச்ச கட்டமாக 2001-ஆம் ஆண்டில் 6 இலட்சம் மக்கள் அங்கே இருப் பார்கள் என்று சொல்லப்படுகிறது. அந்த அளவுக்கான மக்கள் தொகைக்குப் பயன்படுகிற வகையில் இந்தத் திட்டம் நிறை வேற்றப்பட்டுக்கொண்டு வருகிறது.

சிறுவாக்கம் கிராமத்தில் மேநிலை நீர்த்தேக்கத் தொட்டி.

64—(*வினா எண். 9022)—திரு. க. நரசிம்மபல்லவன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) உத்தரமேரூர் தொகுதியில் வாலாஜாபாத் யூனியனில் சிறுவாக்கம் என்ற கிராமத்திற்கு தன்னிறைவு திட்டத்தால் குடி தண்ணீர் மேநிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் வேலை கடந்த மூன்று வருடங்களாக கட்டப்படாமல் உள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) மேநிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு நட வடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இக்குடிநீர்த்தொட்டியின் கட்டுமானப் பணிகள் அனைத்தும் 1986ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் முடிக்கப்பெற்று குடிநீர்த்திட்டம் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது.

திரு. க. நரசிம்மபல்லவன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் சீரிய உத்தரவின் அடிப்படையில் என் னுடைய தொகுதியில் குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைத்ததற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

(பதில் இல்லை).

தஞ்சை மாவட்டத்தில் நிலக்கரி படிவங்கள்.

65—(*வினா எண், 11979)—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தஞ்சை மாவட்டத்தில் நிலக்கரி படிவங்கள் கிடைப் பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?